**Deposition of Witness**
**Additional Subordinate Judge, Tenkasi.**

MCOP.59/2021

ம.சா.1 முப்புடாதி

| | |
|---|---|
| Name | : முப்புடாதி |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 04.07.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்

நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். 05.04.2018 ம் தேதிய முதல் தகவல் அறிக்கை – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.1 ஆகும். 05.04.2018 ம் தேதிய Accident Register – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.2 ஆகும். 11.04.2018 ம் தேதிய மனுதாரரின் Treatment Particulars – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.3 ஆகும். 05.04.2018 ம் தேதிய பார்வை மகஜர் – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.4 ஆகும். 05.04.2018 ம் தேதிய மாதிரி வரைபடம் – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.5 ஆகும். 11.04.2018 ம் தேதிய TN–76–E–4363 என்ற பதிவெண் கொண்ட பயணிகள் ஆட்டோவின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.6 ஆகும். 11.04.2018 ம் தேதிய TN–76–D–7362 என்ற பதிவெண் கொண்ட Pick up வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை – ஜெராக்ஸ் –

ம.சா.ஆ.7 ஆகும். 20.05.2018 ம் தேதிய இறுதிநிலை அறிக்கை – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.8 ஆகும். மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை மற்றும் வங்கி பாஸ் புத்தகம் – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.9 ஆகும்.

1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை –

விபத்து நடந்த சமயத்தில் நான் ஆட்டோவில் தான் பயணம் செய்தேன் என்றால் சரிதான். அந்த ஆட்டோவில் 8 பேர் சென்றோம் என்றால் சரியல்ல. 3 பேர் தான் பயணம் செய்தோம். அவர்களின் பெயர்கள் எனக்கு தெரியும் என்றால் தெரியும். நான் பயணம் செய்த ஆட்டோ வேகமாக சென்றது என்றால் சரியல்ல. எதிரே வந்த வண்டி தான் வேகமாக வந்தது. எதிர்த்தாற் போல் வந்த டெம்போ வேனுக்கு இன்சூரன்ஸ் எல்லாம் இருக்கிறது என்பதினால், அந்த வேனானது எனக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல. டெம்போவை ஓட்டி வந்த டிரைவருக்கு ஓட்டுநர் உரிமம் இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களைப் பொறுத்து நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டவர்கள் அல்லர் என்றால் சரியல்ல.

3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –

எனக்கு விபத்து சமயத்தில 70 வயது இருக்கும் என்றால் சரிதான். நான் விவசாயம் செய்து, மாதம் ரூ.9,000/– வருமானம் பெற்று வருவதாக சொல்லியிருக்கிறேன் என்றும், அது சம்பந்தமாக நீதிமன்றத்தில் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சென்ற ஆட்டோவும், டெம்போவும் நேருக்கு நேராக மோதியது என்றால் சரியல்ல. டெம்போ வந்து தான் நான் பயணம் செய்த ஆட்டோவில் மோதியது. நான் பயணம் செய்த ஆட்டோவில் அதிக அளவில் ஆட்களை ஏற்றிக்கொண்டு, முறையான ஓட்டுநர் உரிமம் இன்றி ஆட்டோவை ஓட்டுநர் ஓட்டி வந்தார்

என்றால் சரியல்ல. எங்கள் ஆட்டோ மீது மோதிய டெம்போ டிரைவரின் பெயர் எனக்கு தெரியுமா? என்றால் தெரியாது. அந்த டெம்போ டிரைவருக்கு விபத்து சமயத்தில் போதிய ஊதியம் இல்லாத காரணத்தினால் எனக்கு இவர் நஷ்ட ஈடு தர கடமைப்பட்டவரல்லர் என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தான் எனக்கு நஷ்ட ஈடு தர வேண்டும் என்றால் சரியல்ல. நான் தற்போதும் விவசாய வேலை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் சரியாகி விட்டது என்றால் சரியல்ல. காயங்கள் உள்ளன. எனக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மையை அதிகமாக காட்டியும், மருத்துவ செலவினங்களை அதிகமாக கூறியும் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்ட நஷ்ட ஈடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(ஒம்)ஏ.பிஸ்மிதா
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.